240

240
1-51.

பதிவு எண் — வெள்ளிக் கிழமையில் குருகுலக் கிளர்ச்சித் தாள்

முல்லைக்கொடி

தமிழ்க் கிழமை வெளியீடு :- இது. சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—ரு	குருகுலம், மாம்பாக்கம் ; விகிருதி, மார்கழி ; 12—1—51.	தளிர்—கரு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 JAN 1951
MADRAS

"குணநலம் சான்றோர் நலனே ; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

' கடனென்ப நல்லவை யெல்லாம் ; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

பொங்கலோ பொங்கல் !

மண்டிணி ஞாலத்து மறனேங்கும் உடலுரமும்
விண்டோடும் இமயத்து மீக்கூரு மனநலமும்
செஞ்ஞா யிற்றின் விஞ்சிய அறிவும்
எஞ்சா அருவியிற் றுஞ்சா இரக்கமும்
தலைப்பெய லன்ன திருவருட் பெருக்கும்
உலைவரு சிறப்பின் உற்றபன் னலங்களும்
மெய்ந்நெறி காட்டும் மேதகு குருவருள்
பொய்ந்நெறிப் பொசுப்பில் பொங்குக பாலொடு
பொங்குநம் புதுமணப் பொங்கலின் என்றே
போற்றுதும் பல்கால் சாற்றுதும்
பொங்கலோ! பொங்கல் பொங்கல் பொங்கலோ!!

—ஒளியகம். நா. ரா. ஆடலரசு,
மாம்பாக்கம் குருகுலம்.

ஆண்டுக் கையொப்பம் ரு. 4. தனித் தாள்—ஓரணா

[முல்லைக் கொடியாள் என்னும் பெண்ணின் வீட்டிற்கு அவள் தோழி மல்லிகை வருகிறாள்.]

முல்லைக் கொடி—[பாடிக்கொண்டிருக்கிறாள்.]

"நினைத்த தெத்தனையின் தவறாமல்...

....

கதித்த நித்தியசித் தருள்வாயே!

திருத்த ணிப்பதியிற் பெருமாளே!"

மல்லிகை — (வருகிறாள்) வணக்கம்; ஒரே உருக்கமும் பாட்டுமாயிருக்கிறதே!

முல்—வணக்கம்; வா மல்லிகா இரு. நாங்கள் தணிகைக்குப் போயிருந்தோம்; அந்த நினைவில் தணிகைக் குமரனைப் பற்றிய ஒரு திருப்புகழைப் பாடிக்கொண்டிருந்தேன். சில நாட்களாக உன்னைக் காண முடியவில்லையே. எங்கே போயிருந்தாய்?

மல் — [அருகிலிருந்த நாற்காலியொன்றில் உட்கார்ந்து] நான் எங்கேயடி போகப்போகிறேன். என்னை யார் அழைத்துப் போகிறேன் என்கிறார்கள்? உன்னை உன் தந்தை சென்னைக்கு மட்டும் அழைத்துப் போய்க் கொண்டிருந்தார். இப்போது தணிகைக்கும் போய் வந்து விட்டாய்.

முல்—மன்னித்துக்கொள். போகும்போது உன்னை மறந்துவிட்டேன். இனி உன்னையும் அழைத்துப் போகிறேன். என் தந்தை அவர் போகுமிடங்களுக்கெல்லாம் இவ்வளவு காலமாக என்னை அழைத்துக் கொண்டா போனார்? அவருக்கு எப்போது பார்த்தாலும் தொண்டுதான் நினைவு. அவர் நினைவுக்கு நான் இப்போது பயன்படுவேன் என்று தெரிந்து அழைத்துப் போனார். முன்னெல்லாம் சிறு குழந்தையாயிருந்தேனும். இப்போதுதான் தகுதி எனக்கு வந்திருக்கிறதாம்.

மல்—தணிகை எப்படியடி இருந்தது?

முல்—தணிகையைப்பற்றி விரிவாகச் சொல்லி, அதை என்னைக் கொண்டு இந்தவாரம் பரவச்செய்தார். அவர் சொன்னதைத் தவிர வேறு

முல்லையும் - -
- - மல்லிகையும்

(முத்து)

எனக்கென்ன தெரியப்போகிறது? ஒவ்வொரு கிழமையிலும் நாட்டுக்கு என்னென்ன சொல்லச் சொல்கிறாரோ அவற்றை அப்படியே சென்று சொல்வேன். திருத்தணிக்கு வந்த அன்பர்களிடமும் அவர் சொன்னதைச் சொன்னேன். என்னை எல்லாரும் பாராட்டினார்கள்.

மல்—தணிகையில் பெருங் கூட்டமாமே!

முல்—அதை ஏன் கேட்கிறாய்! கடல் போன்ற கூட்டம்! முன்னொரு காலம் சிவத்தின் திருமணத்தின் போது, கூட்டத்தின் பாரம் தாங்காமல் வடநாடு தாழ்ந்ததாம். அதுபோல எங்கே தாழ்ந்து விடுமோ என்று அஞ்சினேன். ஆனால் அப்படியொன்றும் தாழ்ந்துவிடவில்லை. தென்னாடுதான் ஒரு போதும் தாழாதே என்று பின்பு துணிந்து கொண்டேன். அங்குக் கூடியிருந்த அத்தனை பேரும் பேசிய மொழி தமிழ்! கேட்ட இன்னிசையும் தமிழிலேயே! ஆண்டுதோறும் இப்படி நிகழ்வதைக் கண்டும் ஆந்திரர் தணிகை தங்கள் நாட்டைச் சேர்ந்தது என்கிறார்களே. உண்மையில் அவர்கள் நாட்டைச் சேர்ந்ததாயிருந்தால் எப்போதாவது அவர்கள் இவ்வளவு பெருந்திரளாகச் சென்று தணிகைப் பெருமானைச் சேவிப்பதுண்டா?

மல்—நன்றாய்ச்சொன்னாய். தணிகை தமிழ் நாட்டைச் சேர்ந்ததுதான் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

முல்—இரு, இரு, பேசிக் கொண்டேயிருக்கிறேனே. முருகக் கடவுள் திருநீறும் குங்குமமும் கொண்டு வருகிறேன் (கொண்டு வந்து கொடுக்கிறாள்).

மல்—திருத்தணிக் குமரா, அடுத்த ஆண்டிலாவது எனக்கு உன் காட்சி கிடைக்கும்படி அருள் புரிவாய் (என்று சொல்லி நெற்றியில் இட்டுக் கொள்கிறாள்) இனி எங்கெந்த ஊருக்கெல்லாம் போவாய்? உன் தந்தை சொல்லியிருப்பாரே!

முல்—குறிப்பிட்ட ஓர் ஊருக்குத்தான் போவதென்பதில்லை. தமிழ் நாடு முழுதும் சுற்றிச் சென்று என் தந்தையின் ஆணைப்படி தொண்டு செய்யப்போகிறேன். பணியில் பெரு மகிழ்ச்சி காண்கிறேன். இது வரை என்றுமே அப்படிப் பெருமகிழ்ச்சி அடைந்ததில்லை. இனிமேல் நான் இப் பணியைத் தவிர வேறு எதையும் விரும்பமாட்டேன்.

மல்—(புன்சிரிப்புச் செய்து கொண்டு) இப்போது இப்படித்தான் சொல்வாய். யாரேனும் உன் கண்ணில் பட்டு உன் உள்ளத்தைக் கவர்ந்து விட்டால், அப்புறம் எல்லாம் மறந்து விடுவாய். என்னைக்கூட மறந்து விடுவாய்!

முல்—அதுதான் இல்லை! இன்னும் நீ என்னைச் சரியாய்ப் புரிந்து கொள்ளவில்லை. என்றென்றைக்கும் எந் நிலையிலும் பணி செய்வதென்று உறுதி கொண்டுவிட்டேன். என் தந்தையும், அவர் தலைமையில் நானும், எனக்கு அன்பரும் சேர்ந்து சேவை புரிவோம். இத் தண்டமிழ்நாடு தன் பண்டைப் புகழோடும் இன்றைத் த[illegible]வோடும் உலகத்தின் முன் தலை நிமிர்ந்து விளங்குவதற்கு எந்நாளும் முயல்வோம். உலகம் நன்னெறியில் இயங்குவதற்கு முடிந்த முயற்சிகளையெல்லாம் செய்துவருவோம்.

மல்—அப்படியா? ஆனால், அவற்றின் பணி வகைகளையெல்லாம் விரிவாகச் சொல் பார்க்கலாம்.

முல்—இப்போது சுருக்கமாகச் சொல்கிறேன். தெய்வப் புலமைத் திருவள்ளுவர் மக்கள் உய்யத் திருவாய் மலர்ந்த திருக்குறள் இருக்கிறதே, அதற்கு ஒரு செயலிடமாக நான் தோன்றிய இல்லத்தை விளங்கச் செய்வது ஒரு வகை; என் இல்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

பத்திரிகை:

சமயத் தொண்டாற்ற, தக்கதோர் பத்திரிகை இன்றியமையாததெனக் கண்டு 'தொண்டன்' என்ற ஓர் மாத வெளியீட்டினை 5 ஆண்டுகட்கு முன்னர் தொடங்கி அதில் சமயக் கட்டுரைகள்–பணிகள்–சமய ஐய விளக்கட்கு விடைகள்–சமய எதிரிடைகளுக்குத் தக்க தடைகள்–சமய கீதங்கள் முதலியவற்றைப் பேரறிஞர்களைக் கொண்டு எழுதுவித்தும், தாமே நேரில் எழுதியும் வெளியிடலாயினர்.

சமய நூல்:

சமய ஐயவிளக்களுக்கு விடை கூறுமுகத்தால் இந்துமத பால பாடமென்னும் வினாவிடை நூல் ஒன்றைக் காலத்திற்கேற்பத் தமிழிலும் மலையாளத்திலும் வெளியிட்டனர். இதனை அடக்க விலைக்குக் கொடுத்ததால் ஆயிரக் கணக்கான மக்கள் படித்துப் பயன் பெற்றனர்.

பரிசும் பட்டங்களும்:

இவர்களது அரும் பணிகளைக் கண்டு தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை ஆண்டு விழாவில் 'பண்டித பூஷணம்' என்னும் பட்ட மளித்தனர். திருபனந்தாள் ஆதீன அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தி தம்பிரான் சுவாமிகள் சென்னை மாகாணத்தில் பல வகையில் தலைசிறந்த சமயச் சொற்பொழிவாளருக்கென ஏற்படுத்தியிருந்த பரிசு ரூ 1000மும், முதல் முறையாகப் பெற்றவர்கள் தமது நாவலரவர்களே. இதனைக் கண்டு மகிழ்ந்த பல சமயப்பேரறிஞர்கள் மன்னார்குடியில் வைத்து 'நாவலர்' என்னும் பட்டம் வழங்கி வாழ்த்தினர். (பார்த்திப வைகாசி 22)

திருவாவடுதுறை ஆதீனத்து 20–வது பட்டத்திலெழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் இவர்களைத் தமது ஆதீன மகாவித்வானாய்த் தேர்ந்தெடுத்துப் பரிசுகள் வழங்கிப் பாராட்டினார்கள். தருமையாதீனம் 25–வது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஷெ ஆதீன குரு பூசை விழாவில் பூசை முடிந்ததும் பிரசாதம் வழங்கும் வேளையில் 'பரசமய கோளரி' எனும் பட்டத்தையளித்து ஆசீர்வதித்தார்கள்.

அமைச்சர்:

சென்னைமாகாண அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தாரால் நெல்லையில் 1948ல் நிறுவப்பட்ட இந்துமதப் பிரசாரப் பயிற்சிக் கல்லூரிக்கு நாவலர் அவர்கள் அமைச்சராக அமைந்து ஷெ கல்லூரியை நடத்தினார்கள்.

திருவருளால் நிகழ்ந்த அற்புதச் செயல்கள்:

இடைவிடாது இறைபணியிலேயே திளைத்து நின்ற இவர்களிடமிருந்து சிற்சில திருவருள் அற்புதச் செயல்கள் வெளிப்படலாயின. இவையனைத்தும் இவர்கள் வெளியிடாது உளத்தடக்கி அத் திருவருள் பெருகும் வண்ணம் வழிபாட்டில் தோயத் தலைப்பட்டார்கள். சிவ பூசையை வழுவின்றி நடத்தியும் ஆலயங்கட்குச் சென்று மூர்த்தி–தலம்–தீர்த்தம் முறையாய்த் தொழுது உருகி இன்றும், சமய வளர்ச்சி ஒன்றினையே குறிக்கோளாய்க் கொண்டு வேண்டுதல் புரிந்து நின்றார்கள். இறைவனருளும் இவர்களிடம் இருந்து வெளிப்படலாயிற்று.

ஸ்ரீமீனாக்ஷி அம்மையின் தோற்றம்:

ஒரு முறை மதுரை விழாவில் 10 நாட்களும் இவர்களது சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அதனிடையில் ஒருநாள் செட்டி நாட்டு வலம்புரிக்குச் சொற்பொழிவுக்குப் போக நேரிட்டது. ஆதலால் இவர்கள் மதுரை அன்னை மீனாட்சியின் முன் போய் வணங்கி விடை பெற்று அம்மன் சந்நிதியிலுள்ள அறுபத்து மூவர் மடத்தில் வந்து அயர்ந்து தூங்கினர். காலை 4 மணி வேளையில் அன்னை மீனாக்ஷி தனது அழகிய திருமேனித் தெய்வப் பொலிவுடன் குதித்து விளையாடும் குழந்தைபோல் கனவில் காட்சியளித்து, "எழுந்திரு, வண்டி வந்துவிட்டது, செட்டி நாட்டுக்குப் போய் வா" எனக் கூறி அருளினர்.

(வரும்)

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

ELEPHANT KISAN

பட்டாடைகளுக்குப்
நூலாடைகளுக்குப்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு. சென்னை 1

பதிப்பித்து அச்சிட்டு வெளியிடுவோர், கி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)

1817, கொல்லம் ஆண்டு 1007-ம் வருஷ மன்மத வருஷம் வைகாசி மீ 17 புதன் கிழமை பகல் 22¼ நாழிகை சுபவேளையில் தோன்றினார்.

இளமையில் கலை பயின்றபின் ஆசிரியர் வேலையிலமர்ந்து மாணவ மாணவிகளுடையவும் மேலதிகாரிகளுடையவும் நன்மதிப்புக்குப் பாத்திரராகி ஆங்கிலப் பாடசாலைத் தமிழ்ப்பண்டிதராய் அமர்ந்து வரலாயினர்.

குடும்பம்:

தருமபுரம் என்னும் ஊரில் உள்ள ஓர் தனவந்தர் குடியிற் பிறந்த ஏக புதல்வியாம் தங்கம்மாள் என்னும் அருங்குணச் செல்வியை மணந்து அவள்பால் மூன்று பெண்களும், இரண்டு ஆண்களுமாக ஐந்து குழந்தைகளைப் பெற்று வளர்த்து அவர்களுக்கு ஆற்ற வேண்டிய அருங்கடமைகள் அனைத்தும் ஆற்றி அகமகிழ்வோடு இல்வாழ்க்கையிலமர்ந்து அறுபது ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

திருநெறித் தொண்டர் குழாம்:

ஆசிரியர் வேலை பார்க்கும் போதே இறையருள் தூண்ட, இறைபணியாற்றும் திருநெறித் தொண்டர் குழாமொன்றை 1928-ல் வடிவீஸ்வரத்தைத் தலைமை நிலையமாக அமைத்துப் பணிபுரியத் தொடங்கினர் இம்முறையைப் பின்பற்றி பல்வேறிடங்களில் பற்பல கிளைகள் நிறுவத் தொடங்கினார்கள். வாரம் ஒரு முறை தொண்டர்கள் அவரவர் ஊர்களில் உள்ள கோயில்களில் கூடித் தேவாரம் முதலிய திருமுறை ஓதிச் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவது மூலமாக இவர்களது சமயப்பணி நாடெங்கும் பரவலாயிற்று. இன்று நாடெங்கும் தொடங்கிவரும் வார வழிபாடு 27 ஆண்டுகட்கு முன்னரேயே நாவலர் அவர்களால் முதல் முதலாக நமது தமிழகத்தில் நடைமுறையில் கொண்டுவரப் பட்டது.

தொண்டு:

சுமார் முப்பது ஆண்டுகட்கு முன்னர் நமது இந்துக் கோயில்களில் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றும் வழக்கம் இல்லாமல் இருந்தது. ஆனால் அந்தந்தக் கோயில்களை ஒட்டிய புராணங்கள் பௌராணிகர்களால் வாசிக்கப்பட்டு வந்தன. சமயத்தைப் பற்றிய ஐயப்பாடுகள் அதிகரித்துச் சமயக் கொள்கைகள் தாக்கப்பட்டு, பிற மதத்தினரால் இந்து மதம் இழித்துரைக்கப்பட்டு, சமயம் நிலைகுலைந்த வேளையில் இந்து சமயச் சொற்பொழிவுகளும், இந்து சமயப் பணிகளும் இந்து அறநிலையங்களிலாவது இன்றியமையாது ஏற்படவேண்டுமென நாவலர் அவர்கள் விரும்பினர். பிற சமயத்தினர் கூட்டம் கூட்டமாய் இந்துமத விசேட விழாக்களில் வந்து சமயப் பிரசாரம் செய்து தங்கள் மதத்தில் இந்துக்களை மதமாற்றிச் சேர்த்து வருவதைக் கண்டு அவர்களுடைய உள்ளம் கொதித்தெழுந்தது. எவ்வகையிலும் வேற்றுமதப் பிரசாரம் இந்துமத தேவஸ்தான விழாக்களில் நடைபெறக் கூடாதென்பதே அவர்களது கருத்தாகும். அதனை நிறைவேற்றப் பல துறையில் மாற்றாரை எதிர்த்துச் சொற்போர் நிகழ்த்தி வெற்றி கண்டார்கள். அதுமுதல் இந்துமத தேவாலய விழாக்களில் இவர்கள் சொற்பொழிவுகள் ஆற்றத் தொடங்கினார்கள். அந்நாளில் இப்பணிக்குத் தேவஸ்தானத்தாரால் எவ்வித ஆதரவும் அளிக்கப்படவில்லை. இப்பணி சமய வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததெனப் பல சமய அறிஞர்கள் கருதத் தொடங்கினர். அக்காலத்தில் அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தின் ஆணையாளராக இருந்த ராவ்பகதூர் திரு C M இராமச்சந்திரன் செட்டியார் B A, B L, அவர்களது அருமுயற்சியால் தேவஸ்தான வருமானத்தில் 5 சதவிகிதம் சமயச் சொற்பொழிவுக்கெனச் செலவு செய்யலாம் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதுமுதல் தேவஸ்தானங்களில் சமயச் சொற்பொழிவுகள் தொடங்கப்பட்டு, தற்போது எல்லாத் தேவாலயங்களிலும், விழாக்களிலும் சொற்பொழிவுகள் பல ஆண், பெண், மாணவ-மாணவிகள் முதலியோர்களால் நடத்தப்பட்டு வருகின்றது. இச்சொற்பொழிவுத் திட்டம் இந்து அறநிலையங்களில் நடைமுறையில் வருவதற்கும் நாவலர் அவர்களே முதற் காரணமாயினர் என்பது ஒருபோதும் மிகையாகாது.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros,

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD, COIMBATORE.

நாகர் கோவில்

ஆறுமுக நாவலர்

நாடு:

செந்தமிழகத்தின் தென் கோடியில் நஞ்சில் நாடு என்றொரு நஞ்சை நாடுளது. அந்நாட்டின் தெற்கு மூலையில் கன்னிக்குமரி கடுந்தவம் புரியும் குமரித்துறை உறைகின்றது. அதில் முப்பெருங் கடல்கள் ஒருங்கு சேர்ந்து முழங்கி ஆரவாரிக்கும். அங்கு குணதிசைக் கதிரவன் உதயமும், குடதிசைக் கதிரவன் மறைவும் பார்க்கப் பார்க்கப் பரவசமளிக்கும். இதன் வடதிசையில் குடமுனி உறையும் பொதியமலை உளது. வறப்பினும் வளந்தரும் வண்மைமிக்க அம்மலையில் ஓலக்க அருவி ஒரு பனை உயரமாக ஒழுகிக்கொண்டே இருக்கும். அருவியின் பக்கத்தில் அகத்தியன் கோட்டமும் அமைந்துளது. இதன் வடமேற்கிலுறையும் வள்ளிமலையில் முருகனது ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய திருவேரகம் எனும் திருப்பதி உளது. திருப்பரங்குன்றில் தெய்வயானையார் மட்டிலும் முருகனோடு உறைவதுபோல் இங்கு வள்ளி நாயகியார் மாத்திரம் முருகனோடு உறைகின்றனர். ஏரகம் எனும் சொல்லே நாஞ்சில் நாடென்னும் இந்நாட்டின் பெயரை நன்கு விளக்குகின்றது. ஏர்—நாஞ்சில், அகம்—நாடு. ஏரகம்—நாஞ்சில் நாடு. இந்நாட்டில் குறிஞ்சியும் முல்லையும் கூடி முயங்கும். முல்லையோ மருதமோ எனக் கண்டோர் வியக்க கவினொடு கழனிகள் காட்சியளிக்கும். நெய்தல் நிலத்தில் உப்பும் மீனும் விண்மீன் எனவே விளங்கித் தோன்றும். ஆறும் முளமும் அணைகளும், கால்களும் நீர்வளமெங்கும் நிறையச் செய்யும் நஞ்சை முப்போகம் நல்குவதாலே இதை நெற் களஞ்சியம் என்றே நவிலுவர் சில்லோர். தென்னையும் பனையும், மாவும், பலாவும் நன்னலமனைத்தும் நல்கிமிளிரும் முனிவர்கள் உறையும் மூலிகை செழித்த மருந்துவாழ்மலை இதன் தென் கிழக்கில் அமைந்துளது. சுசீந்திரம், பூதப்பாண்டி, கோட்டாறு, வடிவீஸ்வரம் முதலிய சிவாலயத் திருப்பதிகளும், திருவெண்பரிசாரம் முதலிய வைணவ ஆலயத் திருப்பதிகளும் மருங்கூர் முதலிய முருகன் ஆலயத் திருப்பதிகளும் இந்நாட்டினைக் கவின்பெறச் செய்கின்றன.

இந்நாடு பண்டைக் காலத்தில் பாண்டி நாட்டைச் சேர்ந்திருந்தது. பாண்டியன் ஆணைக் குட்பட்ட நாஞ்சில் குறவன் என்னும் ஒரு குறுநில மன்னன் இதனை ஆண்டு வந்தான். அவன் கூடாவொழுக்கும் உடையவனாயிருந்ததால் அவனது குடும்பத்தை அழித்து இந்நாட்டு மக்கள் குடியரசாக 800 ஆண்டுகளுக்கு முன்னரே இதனை ஆண்டு வந்தார்கள். இவரது ஆளுகைக்குச் சேர மன்னர்கள் உறு துணையா யிருந்தார்கள். இதனை யறிந்த பாண்டியன் இந்நாட்டுக்கு வந்து இதனைத் தன்னோடு சேர்க்க முயன்றான். அப்போது இந்நாட்டு மக்கள் சேர மன்னனோடு சேர்ந்து கொண்டு பாண்டியனை வெறுத்து தங்கள் நாடு சேர நாட்டைச் சேர்ந்ததே எனக் கூறினார்கள். இதனை ஆலவாய் என்னும் மதுரைக்கு வந்து சத்தியம் செய்து தரவேண்டுமெனப் பாண்டியன் கேட்க, அங்குச் செல்ல மனமில்லாத இந்நாட்டு மக்கள் ஆலவாய் என்னும் பதியொன்றை இந்நாட்டின் கிழக்கெல்லையில் அமைத்து அதில் ஆலவாய் மீனாட்சி சொக்கேசர் கோவில் அமைத்து தாங்கள் சேரநாட்டு மக்களே ஆவர் என மொழி கொடுத்தார்கள். அவ்வாறு மொழி கொடுத்த இடம் இப்போது 'ஆலவாய் மொழி' என அமைக்கப்படுகிறது இவ்வுண்மையை பாண்டியன் அணையில் பொறித்திருக்கும் ஓர் கல்வெட்டால் அறியலாம் இக்கல்வெட்டு, திரு. நாகமையா அவர்கள் எழுதிய ஸ்டேட் மானுவலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

"எத்திசையும் புகழ் படைத்த கொல்லம் இருநூற்றுத் தொண்ணூற்று எட்டாமாண்டு வெற்றி செயும் கும்பத்தில் வியாழன் நின்ற விளங்கு திங்கள் ஆவணி பதினொராம் தேதி தண்ணி விழும் பறளியாற்று அணையும் தள்ளி தமிழ்ப்பாண்டி ராஜசிங்கந்தனையும் வென்று கொத்தலரும் பூஞ்சோலை நாஞ்சில் நாடும் கோட்டாறும் கூவையர்கோன் கொண்டவாறே."

பிறப்பு:

இத்தகைய நலஞ்சேர் நாஞ்சி நாடதற்கு நாகர்கோவில் நற்பதி தலைமைத் தலமாய் இலங்குகின்றது. அதன் பக்கலில் வெள்ளமடம் என வழங்கும் இராமநாதபுரம் என்னும் நல்லூர் ஒன்று உளது. இதில் உத்தமராகிய குற்றாலம் பிள்ளை யென்பவர் ஒருவர் இருந்தார். அவர் நீதிநெறி திறம்பா நலத்தினர். இறைவனை இடையறாது வழிபடும் இயல்பினர். இவர் வீரம்மாள் எனும் உத்தமியை மணந்து இல்வாழ்க்கையை இனிது நடத்தினர். இவர்களிடத்து ஐந்தாம் குழந்தையாய் நமது ஆறுமுக நாவலர் அவர்கள் (1895 மே மீ 29ம் தேதி) சாலிவாகன சகாப்தம்

டில்லியில் அமைக்கப்படும் அரண்மனை, மாமல்லபுரத்திலோ, அல்லது அஜந்தா சிற்பக்கலைகளின் நடுவிலோ அமைக்கப் பெற்றிருந்தால் அதிலே அழகு இருக்கும்; கருத்தும் இருக்கும்; அயலாரின் நடையுடை பாவனைகட்கேற்ப, தங்குமிடங்களைக் காட்சிச் சாலைகள்தோறும் தோற்றுவித்தல் வேண்டும். அவர்களைக் கவரும் வகையில் ஒவ்வொரு ஏற்பாடும் செய்யவேண்டும். சுற்றுப்புறச் சூழ்நிலைகளை, மிக ரம்மியமாகப் பொலிவுடன் வைத்திருக்க வேண்டும். தூண்டியில் கொழுமையான சத்து இருந்தால் தானே மீன்கள் தொடர்ந்து கிடைத்துக்கொண்டிருக்கும்?

அந்நியர் நடமாட்டத்தினால், நமது நாட்டின் அருமைபெருமைகள் வெளிநாடுகளில் விளக்கம் பெறுகின்றன என்பதுமட்டுமல்ல; அவர்களின் செலவுச் சிலவால், செலாவணி முறையில் துரித முன்னேற்றம் ஏற்படுகிறது. நாணயமாற்றங்கள் (Exchanges) நிகழ, அந்நியர் நடமாட்டம் ஓர் கருவியாக அமைந்துவிடுகிறது. இதனால் பொருளாதாரநிலையும் சீர்திருந்தும் என்பது கூறாமலே விளங்குமன்றோ?

சிற்பங்களை உண்டாக்கிச் சிறப்புற்றோம்; செழுமிய காட்சிகளைச்சிறப்பாகவைத்துப்போற்றவில்லை நாம்; சிந்திக்கவேண்டும் இந்த இடத்தில். நாட்டு நலனுக்கு எந்தெந்த வழி துறைகளிலோ முயற்சி செய்யும் தலைவர்கள் இத் துறையில் கண்ணோட்டம் செலுத்தத் தவறினமை ஏனோ? வேறு பல துறைகளிலே ஆக்கம் பெற முயல்வது கையிலிருக்கும் வெண்ணெயை மறந்து நெய்க்கு அலைவதற்கு நிகராம். இந்தக் காட்சிச் சாலைச் சீர்திருத்தங்களை உடனடியாகச் செய்து ஒண்மை பெற அரசியலாரும் முயலவேண்டும். உலகமெல்லாம் நம் கலையின் ஓங்கு புகழ் வளரவேண்டும். நமது ஆற்றல் மிக்க மத்திய அரசாங்கத்தாரும் இவ்வாக்கந்தரும் வேலையை உடன் ஆற்ற ஒல்லும் வழி முயல வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம்.

'அரு'

ஆசிரியர்க்கு:

திருவடிக் கோயில்

உலகங்களில் எழுந்துள்ள ஆலயங்கள் அனைத்தும் சரியை, கிரியை, யோகம் பொருட்டே எழுந்துள்ளன; மன்னு அரசர்களும் இம்மூன்றைஅடிப்படையாகக் கொண்டு தம் ஆற்றலும், அமைதியும் ஆண்டவன் ஆசியும் கொண்டு ஆலயங்களை அழகு பெற அமைத்துள்ளனர். ஆனால் நான்காம் பதம் தூய்மை ஞானம் (திருவடி); அதற்கு ஆலயம் அமைக்கப் பொருள் இருந்தும் யாவும் இருந்தும் அமைக்கமுடியாமல் திணறிப் போனார்கள். இதில் மணிவாசகர்தான் அதற்கு ஆரம்பநிலையில் திருப்பெருந்துறையில் அமைத்தார். ஆனால் பிறகு மன்னுநி மன்னர்களெல்லாம் நிலத்தில்புகழ்வேண்டிக்கலைகளைக் களமாகக் கொண்டு அக்கலைகள் பொருட்டுத் தம் தம் புகழ் காண அத் திருவடிக் கோயிலையே மாற்றி அமைத்துக் கலைக் கோயிலாகச்செய்து விட்டார்கள். திருப்பெருந்துறை கோயில் 20-ம் நூற்றாண்டில் ஓர் கலைக்கோயிலாகக் காட்சி யளிக்கின்றதேயன்றி ''மாணிக்கவாசகன்'' நினைத்துக் கட்டின 'திருவடிக்' கோயிலாகக் காணப்படவில்லை. காலப்போக்கில் கண்ட வள்ளல் இராமலிங்க சுவாமிகளும் திருவடிக்கோயில் (தூய்மை ஞான சபை) கட்டுவிக்க எண்ணங்கொண்டு உலகனைத்தையும் அழைத்தார். உலகங்கள் அவர் காலத்தில் அவர் உள்ளத்தை நாடவில்லை' ஏதோ குழந்தைகள் கோயில் கட்டுவதுபோல் அவர் குறிப்பிட்ட இடத்தில் ஞான சபை ஒன்று காட்சியளிக்கிறது. அந்த ஞான சபையும் இராமலிங்கம் கொண்ட எண்ண இலக்கிற்கும் திருவடிக் கோயில் (ஞானக் கோயில்) இலக்கிற்கும் சரியான முறையில் எழவில்லை. திருவடிக் கோயில் எழுப்புவது ஆழ்நிலையில் சிந்தித்து எழுப்பவல்லது. மணிவாசகனையும், இராமலிங்கத்தையும் சந்தித்து அவர்கள் இயைபு பெற்று எழுப்புதல் கடமை; இந்நிலையில் தாங்கள் 'திருவடி' கோயிலுக்குக் 'கால்கோள்' கொண்டு விட்டீர்கள். 'செயற்கரிய செய்வர் பெரியர்' என்ற இலக்குக்கு ஆளாகத் தன்னையே பணித்துக் கொண்டீர்கள். இந்நிலையில் அடியேன் ஆலோசனைகூறுவது, 'திருவடி'க்கோயில் அமைப்பு எத்தன்மை பெற அமையப் பெறுவது, அதன் அமைப்பு உலகங்கள் அனைத்தும் வியக்கும் தன்மையில் அமைய வேண்டும், மணிவாசகனும் இராமலிங்கமும் கொண்ட, பெற்ற, திருவடிக் கோயிலைத் தாங்கள் உலகங்களுக்கு வழங்கக் காரணமாக அமைவது மகிழ்ச்சிபல! திருவடிக் கோயில் இத்தன்மையில் அமைய வேண்டும் என்பதை அடியேன் உள்ளத்தில் ஒருவாறு மகிழ்வு தோன்ற வெளியிடவேண்டுகிறேன். ஆகையால், திருவடிக் கோயில் காட்சிக்குக் காரணமான தங்கள் உவகை உள்ளம், அன்பு உள்ளம், கொண்டால் வெளியிடுகிறேன் நிறைவுகாணின் கொள்ளவும்.

(ஓ. தூ.)

உடனடியாகச் செய்வார்களா?

நமது நாடு கலைச் செல்வங்கள் நிரம்பிய நாடு, மற்றெந்த நாடுகளையும்விட, நம் நாட்டிலே, கண்டோரைக் கவரக்கூடிய கவின் பெறு காட்சிகள் பல உள. இவைகளைக் கண்டு களிப்பதற்கென்றே பாரினில் வாழும் பல்வகை மக்களும் இங்கு வந்து குழுமுகின்றனர்.

அரை குறையாகப் படித்தவனிடத்தில் சேரும் செல்வம் சிறப்படையுமா? வீணையை மிழற்ற அழகுற இசைக்கத் தெரியாத ஒருவனிடம் அவ்யாழ் இருப்பதால் பயனென்ன? அந்நிலையில்தான் நம் அருங்கலைக் காட்சிப் பொருள்களும், இருந்த நிலையிலே, ஆக்கப்பட்ட அமைப்பிலேயே விளங்கி வருகின்றன. அவற்றைப் பாதுகாத்து அழகு செய்யவில்லை நம்மவர். வெளிநாடுகளிலிருந்து ஆர்வமுடன் வரும் பார்வையாளர்கட்கு ஒரு விதத்தில் ஏமாற்றமே இவை அளிக்கின்றன. கலைகள் நிரம்பிய நாடு என்று களிப்புடன் கூறிப் பெருமைப்படுகிறோமே தவிர, அதைப் போற்றிப் பாதுகாக்க வகையில்லாமல் இருப்பது அறிவீனத்திலும் அறிவீனமன்றோ? இவ்விடத்தில் ஒன்றே ஒன்றுமட்டும் கூறல் சாலும். பிற நாடுகளிலே, மிகச் சிறிய கலைக்காட்சிப் பொருளாயிருந்தாலும், அதற்கு எத்துணைச் சிறப்புக்கள் செய்து அயலாரை ஈர்க்கின்றனர்? அமெரிக்காவே இதற்குத் தக்க சான்று. வெறும் சாதாரணக் காட்சிகட்குப் பட்டுக் குஞ்சம் கட்டித் தொழுது நிற்கும் அவர்களைக் கண்டு நாம் நாணுவதா? அன்றி அவர்கள் திறனைப் பேணுவதா? வீணுக்குக் கூறவில்லை நாம்; விளங்குவோம் இன்னும்.

மல்லை எனப்படும் மாமல்லபுரத்திலே, கலைக் கடவுளே பல வடிவில் தோன்றி மகிழ்விக்கின்றனரோ என்ற அளவுக்கு, கலையுருவங்கள் நிரம்பி இருக்கின்றன. இவற்றைப் பார்வையிடும் அயலாருக்கு ஏதேனும் வசதிகள் உள்ளனவா? அவர்களுக்குத் தங்குமிடமோ, சிற்றுண்டிச் சாலையோ உளதா? இல்லையே; சிற்றுண்டி அடங்கியமையும் தெர்மாஸ் குடுவையையும் மாட்டிக்கொண்டு காட்சிகளைக் கண்டு செல்லும் அவர்களுக்கு, உள்ளத்தில் நம் நாட்டின் கவனக் குறைவுபற்றி எத்தகைய கருத்து ஏற்படும்?

இவ்விருபதாம் நூற்றாண்டுக் காலத்தை விளம்பரக் காலம் என்று கூறினால் மிகையன்று. சரக்கு நன்றாயில்லாவிட்டாலும், செய்யப்படும் விளம்பரத்தினாலேயே, ஒருவன் செல்வந்தனாவதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். இதை அவரவரும் அறியாமலிருக்கிறார்களா? அல்லது அறிந்தும் செயலற்றவராய்ச் சிந்தை குலைந்துளாரா? நமக்குப் புரியவில்லை

அந்நியரின் நடமாட்டம் நமது நாட்டுக்கு மிக மிகத் தேவை. சுத்தமாய் நடக்கும் சிற்றுண்டிச் சாலையிற்றானே ஒருவன் நுழைய விரும்புவான்? நம் நாட்டின் கலைப் பொருள்களையும் சுற்றுப்புறச் சூழ்நிலைகளையும் சுகாதார நிலையில் வைத்திருக்கத் தவறிவிட்டனர் அரசியலார். கப்பலிலிருந்து இறங்கி நாட்டினுள் காலடி எடுத்து வைக்கும்போதே பிச்சைக்காரர் தொல்லை; பிளாட்பாரத்தில் வாழும் ஏழை மக்களின் வறுமைக் கோலம்; குப்பையும் சகதியும் நிறைந்த சாலைகள், சிறந்த முறையில் நடக்காச் சிற்றுண்டிச் சாலைகள் இவ்வளவும் அயலானுக்கு அருவருப்பையே விளைக்கும். நாகரிகம் உச்ச நிலையில் திகழும் நியூயார்க்கில் அந்நிய மக்களைக் கவர, முதலில அவர்கள் கையாளும் சூழ்ச்சி, அவர்கள் உள்ளத்தில் நாட்டைப் பற்றிய நல்ல கருத்தை விதைப்பதுதான். அதற்காகவே அங்கிருக்கும் சுங்க அதிகாரிகளும், மூட்டை தூக்குவோனும், வண்டியோட்டியும் மிகக் கண்ணியமான முறையில் நடந்து ஓர் உயர்ந்த கருத்தினை உண்டாக்கி விடுகின்றனர். இவைகளால் மகிழ்ந்த அயலான் நாட்டினுட் சென்றால் அவனுக்குச் சிறந்த முறையில் வரவேற்பும், உயர்ந்த முறையில் உபசரிப்பும் காத்திருக்கும்.

இவற்றையெல்லாம் எதற்குக் கூறுகிறோமென்றால், கலைக் கருவூலங்களைக் கணக்கின்றி வைத்துக்கொண்டு அவற்றினைக் காத்துப் போற்றத் தெரியாத—போற்றத் தவறிவிட்ட நம்மனோர்க்கு அறிவுறுத்துவதற்காகத்தான். நமது நாட்டின் அருமை பெருமைகளை உணர்ந்தும், கேட்டும், நம் நாட்டைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் வரும் அந்நியரின் தொகை, இப்போது ஒன்றுக்கு இரு மடங்காகப் பெருகியுள்ளது இக்காலமே சீர்திருத்தங்களுக்கு ஏற்ற காலம். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வதை அரசியலார் தமது கடமையாகக் கொள்ளவேண்டும்.

அண்மையில் புதுடில்லியில் அந்நியப் பிரயாணிகட்கென்று ஓர் மாளிகை (Guest house) அமைக்கப்பட்டு வருகின்றது எனக் கேள்வியுற்றோம். புது

துவது, அவ்வளவு சிறப்புடையதாகத் தோன்றவில்லை. இதனால் மக்களின் வெறுப்பையே சம்பாதிக்க நேரிடும். பொதுமொழி என்று ஒன்று ஏற்படுத்தி, அதை, அரசியல் துறையிலோ, அல்லது அரசாங்கத் தொழில் துறையிலோ ஈடுபடுபவர்கள் மட்டும் கற்க வேண்டும், என்று ஏற்பட்டால், அப்போது பொதுமொழிச் சிக்கல் அனைவரையும் பாதிக்காது. தாய் மொழியிலேயே கல்வி பனைத்தும் பயின்ற பிறகு, அரசியல் துறையிலோ, அரசாங்கத் தொழில் துறையிலோ புக விரும்புவோர், அதற்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் பொது மொழிக் கல்வியைக் கற்கலாம். மற்றவர்கள் இதைக் கற்க வேண்டிய தேவையில்லை. இதனால் மனவெறுப்பு மறையும். அரசியல் துறையிலும் சிக்கல்கள் ஏதும் இன்றி, பொது மொழிச் சிக்கல் இனிதாகத் தீர்க்கப்பட்டுவிடும்.

மொழி உரிமை அளித்து, மக்களை அவரவர் மொழியிலே பேசிப் பழகும் பிறப்புரிமையைப் போற்றினால், வேற்றுமையில் ஒற்றுமை காணலாம். மக்களிடையே மனக்கசப்பு ஒழியும். குடியரசு என்ற பெயருக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகவும் விளங்கும். எனவே, நாட்டு முன்னேற்றம் வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் காரணமாக, பொதுமொழிப் பிரச்சினையை, மேற்கூறிய வண்ணம் நாட்டிலே நடைமுறையில் கொண்டுவந்து, தீர்த்துவிடலாம் என்று நம்புகிறோம்.

வாழ்க மொழிவழி உரிமை!

தும்பிக்கு.....

(மணிமொழி.)

அரைமணி நேரமாய் மெய்ம்மறந்து—அந்த
அழகுப்பூவில் வீற்றிருந்தாய்
உறைந்த கடல்போல் தும்பியே நீ—அங்கு
உறைந்தது ஏனோ சொல்லிடுவாய்! (1)

உறங்கினையோ தேன் உண்டனையோ—அங்கு
ஓவியம்போலும் இருந்தது ஏன்?
மரங்களினிடையே உனைக்கண்டு—தென்றல்
அழைத்திடுமோ நீ பறப்பாயோ? (2)

அஞ்சிறை ஒளிவிட மீண்டும் நீ—அவ்
அழகுக் காவில் திரிவாயோ?
நெஞ்சினில் மகிழ்ச்சிப் பெருக்கெடுக்கப்—பல
நிறத்தின் பூக்களைச் சுவைப்பாயோ? (3)

கொஞ்சிட என்னிடம் வாராயோ—ஒரு
குறையும் நோது கேளாயோ
'வஞ்சி' என் தங்கை என்னுடனே—வளர்த்த
வண்ணச் சோலையைப் பாராயோ (4)

ஓடித்திரிந்து உன் சிறகு—சிறிது
ஓய்ந்திடும் அந்த வேளையிலே
ஆடி நீயங்கு வந்திடுவாய்—எங்கள்
அழகிய சோலையில் தூங்கிடலாம் (5)

அடிக்கடி நீயும் வருவாயே—எங்கள்
அழகுச் சோலை தரும்விருந்தை
குடித்து மகிழ்ந்து எம்மருகில்—குறுங்
கிளையில் இருப்பாய் பேசிடலாம் (6)

நீலவானத்தின் அழகினையும்—எங்கள்
நெஞ்சைக் கனிவித்த பாட்டினையும்
கோல ஞாயிற்றின் ஒளியினையும்—எங்கள்
குழந்தைப் பருவத்து நினைவினையும் (7)

பாடிடுவோம் நீ கேட்டிடலாம்—அந்தப்
பாட்டை உனக்கு ஊட்டிடலாம்
தேடினும் கிட்டாது அந் நாட்களெலாம்—இன்பத்
தேனினும் இனிக்கும் அந் நாள் நினைவே! (8)

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

6-ம் ஆண்டுக் கையொப்பம்

(23-10-53 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளிநாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

கிளை	செய, சித்திரை,	தளிர்
6	30-4-54 வெள்ளி.	28

சென்னையில் குருகுல விழா

நம் குருகுலம் பணிநோக்குடையது. மொழி கலை தொழில் அருள் பணி என்னும் ஐவகை வாழ்வியல் துறைகளிலும் ஒருங்கே கருத்திருத்தி மக்களைச் சான்றாண்மை நெறியிற் பழக்கி வரும் முழு நோக்கும் நலமும் கொண்டது. ஏற்ற பணித்திட்டமும் பெற்றிருப்பது.

குருகுலத்தார் பலர் சென்னையில் இருப்பதால் அவர்களையெல்லாம் இணைத்து இயக்கிப் பணிகொள்ளுதற்காகச் சென்னையில் ஒரு விழாவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. விழா நிகழ்ச்சிகள் எல்லாம் ஒரே நாளில் முற்றுப்பெறவேண்டும் என்றே முதலில் கருதப்பட்டது.

விழாக்கள் பல நடக்கின்றன; பலர் நடத்துகின்றார்கள்; அவற்றுள் பலவற்றில் வெறும் வெற்றாரவார வேடிக்கைகளும், பேச்சுகளும், நடத்துவோர் பற்றிய விளம்பரங்களுமே பெரும்பாலும் நிரம்பியிருக்கின்றன; மகிழ்ச்சி நிரம்பிய விழாக்களில் இவையெல்லாமும் ஓரளவு இருக்கவேண்டுவதுதான்; ஆயினும், ஒரு நல்ல செயலை நிறைவேற்றியதன் பயனாகவும், மேற்கொண்டு பல நல்ல செயல்களை நிறைவேற்றுவதன் முகமாகவும் உருவான சில நற்செயல்களைக் கொண்டு ஒரு விழா நடப்பது எவ்வளவு நல்லது!

இவ்வகையில், திருக்குறள் அடிப்படையில் அமைந்த பணிநோக்குடைய நம் குருகுல விழா சென்னையில் நடப்பதன் முன், அதன் சார்பில் சிறந்த ஒரு நற்பணியேனும் நடைபெறவேண்டும், அதன் நிறைவிலேயே விழா நிகழவேண்டும், இல்லையேல், குருகுலத்தார் விழாவுக்கும் மற்றை விழாக்களுக்கும் குறிப்பிடத்தக்க நல் வேறுபாடு ஏதும் இல்லாமற்போகும்' என்று தோற்றியது.

எனவே, 'திருக்குறளதிகாரச் செயல் முறைகளை எழுதிக் கொடுக்க நம் ஆசிரியர் சென்னைக்கு வருங் காலங்களில் தங்கியிருக்கும் திருவள்ளுவர் திருக்கோயிலில், விழாவுக்கு ஒன்பது நாட்களுக்குமுன் தொடங்கித் திருக்குறளின் ஒன்பது இயல்களையும் சென்னையின் ஒன்பது பேட்டைகளில் திருக்குறள் ஊர்வலத்தோடு பொதுக் கூட்டம் நடத்தி விளக்கித் திருக்குறள் பரப்புரை (பிரசாரம்) செய்து இறுதிநாளில் குருகுல விழாவைத் திருவள்ளுவர் திருக்கோயிலிலேயே நடத்துவது நல்லது' என்று துணியப் பெற்றது. மிகக் குறுகிய காலத்தில் விரைந்து ஏற்பாடுகள் செய்யப் பெற்றன.

19-3-54 முதல் 27-3-54 வரை அங்கங்கே திருக்குறட் சொற்பொழிவுகளும், 28-3-54 அன்று குருகுல விழாவும் நடைபெற்றன. இறுதி நாள் மட்டுமன்றி, பேட்டைகளில் நடைபெற்ற திருக்குறட் கூட்டங்களும் தனித்தனி விழாவைப்போலவே மிகச் சிறப்பாக இருந்தன.

திருக்குறள் மாநாடுகளுக்குக் கூடும் அளவு கூட்டங்கள் ஒவ்வொரு நாளும் பேட்டைகளில் கூடின. ஆடவர்களிற் சரிபாதி என்னும்படி மாதர்களும் தொடர்ந்து வந்தனர். இவற்றால் எல்லாம் மேல் மேல் உணர்ச்சியும் ஊக்கமும் வளர்ச்சியும் விழா முழுவதற்குமாக அமைந்து வந்தன.

குருகுலச் சார்பில் அச்சிடப்பட்ட பொது அழைப்பிதழ்கள் ஆயிரக்கணக்கில் வெளியூர்களுக்கு அஞ்சல் செய்யப்பட்டன. அங்கங்கே கூட்டங்களிலும் வழங்கப்பட்டன. பேட்டைகளில் கூட்டத்தை நடத்திய பெரு மக்களும் தனித்தனி விளம்பரங்கள் வெளியிட்டிருக்கின்றனர். குருகுல அன்பர் திரு. செல்வராசு என்பவர் அன்றாட நிகழ்ச்சிகளை ஆயிரமாயிரம் துண்டு விளம்பரங்கள் அச்சிட்டு முன்னாள் கூட்டங்களில் வழங்கிவந்தார்: திருக்குறட் சொற்பொழிவுகளுக்கும், குருகுல விழாவுக்குமாக இரு